செய்தி வெளியீடு எண். 471 நாள். 25.11.2006.

# செய்தி வெளியீடு

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பல்வேறு பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்டார்கள்.

ஆய்வின் முடிவில் பின்வரும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

(1) அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளிலும் சமீபத்தில் பெய்த மழையில், சேதமடைந்த சாலைகளை உடனடியாக சீர்படுத்தி செப்பனிட வேண்டுமென்றும், இதற்காக இயற்கை இடர்ப்பாடுகள் நிதியிலிருந்து ரூ.25 கோடி வழங்கப்படும்.

(2) தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ் திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்க தமிழக அரசு எடுத்த முடிவால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தமிழக அரசு ஈடுகட்டும்.

(3) நகராட்சி நிர்வாகம் மற்றும் பேரூராட்சி துறைகளில் தற்போது காலியாக உள்ள 4500 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

(4) விளம்பரப் பலகைகளினால் வரும் விளம்பர வரி கடந்த ஆட்சியில் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பிலிருந்து அரசுக்கு மாற்றப்பட்டது. இதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் இழப்பும் ஏற்பட்டது. ஆகவே, முன்பு இருந்தபடியே விளம்பர வரி விதித்து வசூலிக்கும் உரிமையை உள்ளாட்சி அமைப்புகளுக்கே திரும்ப வழங்கப்படும்.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9